DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TIRUCHENDUR

| | |
|---|---|
| Name : முத்துராமலிங்கம் | Father/Husband Name : ராஜாசுந்தரம் |
| Age : 57 | Village : மேலச்செவல் |
| Taluk : | Calling : மேலாளர் |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29h June 2026

(Accused Present.)

**முதல் விசாரணை** :–

1. நான் மேலச்செவலில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிதி நிறுவனத்தில் மேலாளராக வேலை செய்து வருகிறேன். 2016 ம் ஆண்டு ஆசிர்வாத் மைக்ரோ பைனான்ஸ் என்ற நிறுவனத்தில் வட்டார மேலாளராக பணிபுரிந்தேன். எனது மேற்பார்வையின் கீழ் மூன்று கிளைகள் உள்ளது. எங்கள் நிறுவனத்தின் மூலம் கிராம மற்றும் நகர்புற பெண்களுக்கு RBI விதிப்படி குறைந்த வட்டிக்கு கடன் வழங்குவோம். ஒரு நிறுவனத்திற்கு மூன்று கிளை மேலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். ஆறுமுகநேரி கிளையில் 250 க்கு மேற்பட்ட மையங்கள் உண்டு. எதிரிகளை தெரியும். ஆறுமுகநேரியில் கிளையில் Field Development Officer ஆக பணிபுரிந்தார்கள். அவர்களுடைய பணி கடன் பெற்ற உறுப்பினர்களிடமிருந்து கடனை ரசீது மூலம் வசூல் செய்து அலுவலகத்தில் செலுத்துவதாகும்.

2. எதிரிகள் அவர்கள் பொறுப்பில் உள்ள 40 குழுவிலிருந்து எங்கள் நிறுவனத்தால் விதிகளின் படி உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தவணைகளை வசூல் செய்து எங்கள் நிறுவனத்தில் கட்டுவது வழக்கம். தேதி, மாதம் நினைவு இல்லை. 2016 ம் ஆண்டு கடைசி மாதத்தில் எதிரிகள் அவர்கள் குழுவிலிருந்து பெற்ற பணத்தை செலுத்தியதில் குறைபாடு இருந்தது. சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்தேன். எதிரிகள் ரூ. 7 இலட்சம் வரை கொடுக்க வேண்டும் ஆனால் ரூ. 5 1/2 இலட்சம் வரை கொடுத்துள்ளார்கள். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.)**

3. மேற்படி வித்தியாச தொகையை பின்னர் எதிரிகள் கொடுத்துவிட்டதாக கேள்விபட்டேன். மேற்படி நிறுவனம் தற்போது நடப்பில் இல்லை. மேற்படி எதிரிகள் கவனித்து வந்த குழுவின் நோட் நிறுவனத்தில் காணாமல் போயிருந்தது. இது சம்மந்தமாக 6 வருடங்களுக்கு முன்பாக நான் எதிரி நிசாந்த் வீட்டிற்கு சென்ற போது அவருடைய தந்தை கால்வின் என்பவர் நிசாந்த் வசூலித்த பணம் மற்றும் ஆவணங்கள் அவரிடம் உள்ளதாக தெரிவித்தார். பின்னர் போலிசாரிடம் புகார் கொடுத்த பிறகு அவை மீட்கப்பட்டு வங்கியில் வரவு வைக்கப்பட்டது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

4. எதிரிகளின் பொறுப்பில் உள்ள குழுக்களின் பெயர் தெரியாது என்றால்

தற்போது ஞாபகம் இல்லை. குழுக்களுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் ஆவணத்தை பார்த்தால் தெரியும், தற்போது ஞாபகம் இல்லை. குழுக்களுக்கு கொடுக்கப்பட்ட கடன் தொகை முழுவதுமாக குழுக்கள் மூலம் எதிரிகளுக்கு செலுத்தப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை, ஆவணத்தை பார்த்தால் சொல்லமுடியும். குழுக்கள் மூலம் பெற்ற கடன் தொகை முழுவதுமாக செலுத்தாத காரணத்தினால் கொடுக்கப்பட்ட கடனுக்கும், பெறப்பட்ட வசூலுக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால் சரிதான்.

5. எதிரிகள் பணத்தை கையாடல் செய்த விபரம் நேரடியாக தெரியாது என்றும், சந்தேகத்தின் பேரில் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் வசூல் செய்து வங்கியில் செலுத்திய பணத்தில் பாக்கி உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அந்த பணத்தை எதிரிகள் ஏற்கனவே செலுத்திவிட்டார்கள் என்றால் சரிதான். எதிரியின் வீட்டில் வங்கியின் ஆவணங்கள் இருந்ததாக சொல்லியுள்ள நிலையில் வேலைப்பளு காரணமாக வீட்டிற்கு சென்று எழுதியிருக்கலாம், வேலைப்பளுவினால் ஒப்படைக்காமல் இருந்திருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

6. எதிரிகள் தற்போது மேற்படி வங்கிக்கு எந்தவொரு பணபாக்கி செலுத்த வேண்டியதில்லை என்றால் சரிதான். மேற்படி எதிரிகள் வசூல் செய்த குழுவின் உறுப்பினர்களுக்கும் எந்தவொரு பாக்கி செலுத்த வேண்டியதில்லை என்றால் சரிதான்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd. Tr. M. V O Chidambaram,
Judicial Magistrate, Tiruchendur.

True Copy/AS